: 44 : 5 2013



நல்லாட்சிக்கு வழிவகுக்கும் உள்ளாட்சிகள்

– இரா.ம.பாவேந்தன்

சிறியவை எப்போதும் அழகானவை (Small is beautiful) என்பது பொருட்களுக்கு மட்டுமின்றி அரசு நிர்வாகத்திற்கும் பொருந்தும். ஒரு நாடோ அல்லது மாநிலமோ அல்லது மாவட்டமோ அளவில் பெரியதாக இருந்தால் அதன் நிர்வாகத்தை ஆட்சியாளர்களால் செம்மையாக செய்ய முடியாது என்பதை கருத்தில் கொண்டுதான் புதிய மாநிலங்களும், மாவட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. புதிய மாநிலங்களும் மாவட்டங்களும் உருவாக்கப்பட்டால் கூட ஆட்சி அதிகாரம் முழுவதும் தேசத் தலைமையிடமே இருந்தால் ஒவ்வொரு பகுதி மக்களுக்கும் என்னென்ன தேவை என்பதை கண்டறிந்து அவற்றை நிறைவேற்றுவது மிகவும் சிரமமானதாக இருக்கும். மக்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதே சிரமமானதாக இருக்கும்போது அந்த நாட்டில் நல்லாட்சி நிலவுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருக்கும். இதைக் கருத்தில் கொண்டுதான் ஒவ்வொருப் பகுதிக்கும் என்னென்ன தேவையோ அவற்றை கண்டறிந்து நிறைவேற்றுவதற்காக உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

அதுமட்டுமின்றி ஜனநாயக ஆட்சி என்பது மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசை கொண்டு ஆட்சி நடத்துவது ஆகும். இதன் அடிப்படை நோக்கம் மக்களுக்கான தேவைகளை அவர்களே நிறைவேற்றிக் கொள்ளும் அளவுக்கு அதிகாரம் அளிப்பதாகும். இதற்கான சிறந்த கருவியாக உள்ளாட்சி அமைப்புகள் இருக்கும் என்பதை கருத்தில் கொண்டுதான் உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

இந்தியாவில் உள்ளாட்சியின் தோற்றம்

உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்துவதில் உலகிற்கே இந்தியாதான் முன்னோடி என்று கூறினால் அது மிகையல்ல. கி.பி. 1700வது ஆண்டிலேயே இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டு வந்ததாக வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து என்பது பஞ்ச(ஐந்து) ஆயத்து (அவை) ஆகிய இரு சொற்களின் இணைப்பு ஆகும். அதாவது பஞ்சாயத்து என்பது அக்காலத்தில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட அவையாக விளங்கியிருக்கிறது. தொடக்கக் காலத்தில் பஞ்சாயத்துகளுக்கு

இரா.ம.பாவேந்தன், பத்திரிகையாளர், சென்னை



மிக அதிக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. நிர்வாக அதிகாரம் மட்டுமின்றி நீதி அதிகாரமும் உள்ளாட்சி அமைப்புகளிடமே இருந்தது. ஒவ்வொரு ஊரிலும் நிலங்களை மக்களுக்கு பகிர்ந்து அளித்தல், அதற்கான குத்தகையை வசூலித்து மன்னரிடம் / அரசிடம் செலுத்துதல், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருதல், மக்களுக்கிடையே ஏதேனும் பிரச்னைகள் ஏற்பட்டால் அதை தீர்த்து வைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் அக்காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளே செய்து வந்தன. இதனால் மக்கள் எந்த பிரச்னையும் இல்லாமல் வாழ முடிந்தது.

மொகலாயர்கள் ஆட்சிக் காலத்தில் அரசு நிர்வாகத்தில் சாதியமும், ஆதிக்கவாதமும் தலையெடுத்ததன் விளைவாக உள்ளாட்சி நிர்வாகம் படிப்படியாக செயலிழக்கத் தொடங்கியது.

உள்ளாட்சி நிர்வாகத்திற்குப் பதில் ஜாமீன்தார் முறை உருவானது. இதனால் உள்ளாட்சி முறை அடியோடு சீரழிந்தது.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் உள்ளாட்சி அமைப்புகள் மேலும் பின்னடைவைச் சந்திக்கத் தொடங்கின. மக்களிடமிருந்து அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் வரிகளை மட்டும் வசூலித்து சென்ற நிலையில் மக்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை. இதனால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளானார்கள். இதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் 1870வது ஆண்டில் மாயோ பிரபு தீர்மானத்தை இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினர். அதைத் தொடர்ந்து இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகள் மீண்டும் சீரடையத் தொடங்கின. பின்னர் இந்தியாவின் வைச்ராயாக பதவியேற்ற ரிப்பன் பிரபு தான் 1882ம் ஆண்டு மே 18ம் தேதி தமது பெயரில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் புத்துயிர் ஊட்டினார். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களை அளித்து அவற்றின் நிர்வாகத் திறனை வளர்ப்பது, அவற்றின் மூலமாக அரசியல் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவது ஆகியவைதான் ரிப்பன் பிரபுவின் நோக்கங்களாக இருந்தன. ஆனால் மக்கள் விழிப்புணர்வு பெற்றுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த ஆங்கிலேய அதிகாரிகள் ரிப்பன் பிரபுவின் சீர்திருத்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளைப் போட்டனர்.

அதன்பின்னர் ஆட்சி அதிகாரத்தை பரவலாக்குவதற்காக ராயல் ஆணையத்தின் பரிந்துரைகள், மாண்டேகு – செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்த ஒப்பந்தம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் உள்ளாட்சி அமைப்புகள் முழுமையான அதிகாரம் பெற்றவையாக மாற்றப்படவில்லை.

விடுதலைக்குப் பிந்தைய உள்ளாட்சி நிர்வாகம்

கிராமங்கள்தான் இந்தியாவின் முதுகெலும்புகள் என்று உறுதியாக நம்பிய மகாத்மா காந்தியடிகள், கிராமங்களை நிர்வகிக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். விடுதலைப் போராட்டத்தின்போதே இந்தக் கருத்தை அவர் தீவிரமாக வலியுறுத்தி வந்தார். எனினும் விடுதலைப் போராட்டத்தின் கடைசிக் காலத்தில், அதிகார பரவலாக்குவதைவிட, முழு சுதந்திரத்திற்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால் உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும் என்ற மகாத்மா காந்தியின் நோக்கம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. அதன்பின்னர் இந்தியா விடுதலையடைந்த பின்னர் உள்ளாட்சி அமைப்புகளை புதுப்பிக்க வேண்டும் என்றும் அப்போதுதான் கிராம மக்களுக்கு உண்மையான தன்னாட்சி கிடைக்கும் என்றும் காந்தியடிகள் வலியுறுத்தினார். அவரது வலியுறுத்தலை ஏற்றுத்தான் இந்திய அரசியல் சட்டத்தில் 40வது பிரிவு (உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்துதல்) சேர்க்கப்பட்டது. அதில், 'கிராம ஊராட்சிகளை ஏற்படுத்துவதற்கும், அவை உள்ளூர் அரசுகளாக செயல்படும் அளவுக்கு அதிகாரங்களை அளிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்திய அரசியல் சட்டம் 1949ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிறகு காந்தியடிகளின் கனவுக்கிணங்க உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டன. எனினும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ளூர் அரசு என்று சொல்லக் கூடிய அளவுக்கு அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை. அதுமட்டுமின்றி உள்ளாட்சியின் நிர்வாகத் திறனும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை. இதையடுத்து உள்ளாட்சி அமைப்புகளை



வலுப்படுத்துவது குறித்து அரசுக்கு பரிந்துரை அளிப்பதற்காக பல்வேறு ஆணையங்களும், குழுக்களும் ஏற்படுத்தப்பட்டன. 1957ம் ஆண்டில் பல்வந்த்ராய் குழுவும், 1963ம் ஆண்டில் கே.சந்தானம் குழுவும், 1978ம் ஆண்டில் அலோப் மேத்தா குழுவும், 1985ம் ஆண்டில் ஜி.வி.கே. ராவ் குழுவும், 1986ம் ஆண்டில் எல்.எம்.சிங்வி குழுவும் ஏற்படுத்தப்பட்டன. இந்தக் குழுக்கள் பல்வேறு பரிந்துரைகளை அளித்தன. எனினும் அவற்றில் பெரும்பாலானவை இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை.

1986ம் ஆண்டில் அமைக்கப்பட்ட எல்.எம். சிங்வி குழு உள்ளாட்சி அமைப்புகள் முழு அதிகாரத்துடன் செயல்படவேண்டுமானால் அவற்றுக்கு அரசியல் சட்ட அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரை வழங்கியது. ஆனால் மாநிலங்களின் அதிகாரங்களை வரையறுப்பதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி சர்க்காரியா ஆணையம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசியல் சட்டத் தகுதி வழங்குவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்காக முயற்சிகள் தடைப்பட்டன.

பஞ்சாயத்து ராஜ்

1984ம் ஆண்டில் இறுதியில் இந்தியாவின் பிரதமராக பதவியேற்ற ராஜீவ்காந்தி உள்ளாட்சி அமைப்புகளின் மூலம்தான் கிராமப்பகுதிகளில் உண்மையான முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்பினார். எனவே எல்.எம்.சிங்வி குழுவின் பரிந்துரைகளை ஏற்று, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசியல் சட்ட அந்தஸ்து வழங்குவது உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை உள்ளடக்கிய பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை அவர் கொண்டு வந்தார். 64வது அரசியல் சட்டத் திருத்த முன்வரைவு என்று பெயரிடப்பட்ட அந்த சட்ட மசோதா நாடாளுமன்ற மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மாநிலங்களவையில் இச்சட்ட மசோதா தோல்வியடைந்ததால் பஞ்சாயத்துராஜ் நடைமுறைக்கு வரவில்லை.

அதன்பின்னர் 1989ம் ஆண்டில் தேசிய முன்னணி ஆட்சியின்போது, பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை ஏற்படுத்தும் நோக்குடன் 74வது அரசியல் சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் அது நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே மக்களவை கலைக்கப்பட்டுவிட்டதால் அப்போது அந்த மசோதாவை நிறைவேற்ற முடியாமல் போனது.

1991ம் ஆண்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று நரசிம்மராவ் தலைமையில் புதிய அரசு அமைந்த பின்னர்தான் பஞ்சாயத்துராஜ் சட்டம் 73வது அரசியல் சட்ட திருத்த முன்வரைவாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 1992ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம் 1993ம் ஆண்டு எப்ரல் 24ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசியல் சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புகளின் வடிவம்

இந்தியாவில் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூன்று அடுக்களை கொண்டவை ஆகும். முதல் அடுக்கு ஊராட்சி ஆகும். இது கிராமங்களை நிர்வகிக்கும் அமைப்பாகும். இரண்டாவது அடுக்கு ஊராட்சி ஒன்றிய குழு ஆகும். இது ஊராட்சி ஒன்றியங்களை நிர்வகிக்கும் அமைப்பாகும். மூன்றாவது அடுக்கு மாவட்ட ஊராட்சி ஆகும். இந்த மூன்று அமைப்புகளுக்குமான உறுப்பினர்கள் அந்தந்த பகுதி வாக்காளர்களால் தேர்வு செய்யப்படுகின்றனர். உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களைப் பொறுத்தவரை ஊராட்சி தலைவர்கள் மட்டும் மக்களால் நேரடியாக தேர்வு செய்யப்படுவார்கள். ஊராட்சி ஒன்றியக் குழு பெருந்தலைவர்களும், மாவட்ட ஊராட்சித் தலைவர்களும் அந்தந்த அமைப்புகளின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த மூன்று அமைப்புகளின் துணைத் தலைவர்களும் உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இவைத் தவிர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் இந்தியாவில் உள்ளன. அவை பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் என மூன்று வகைப்படும். இந்த அமைப்புகள் நகர்ப்பாலிகா சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டவையாகும். இவற்றின் தலைவர்களும் உறுப்பினர்களும் மக்களால் நேரடியாக தேர்வு செய்யப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடவோலை முறை

உள்ளாட்சி முறையில் தமிழகம் முன்னோடியாக விளங்கியதற்கு ஏராளமான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. பழங்காலத்தில் குடவோலை முறைப்படிதான் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தேர்வு ழய்#யப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. தமிழ்நாட்டில் குடவோலை முறை பற்றிய செய்திகள் பாண்டிய நாட்டிலேயே முதலில் கிடைக்கப் பெற்றுள்ளன. கி.பி. 800 நூற்றாண்டிலேயே திருநெல்வேலி மானூரில் கண்டுக்கபட்ட மாறன் சடையனின் கல்வெட்டு ஒன்று பாண்டிய நாட்டு பிராமணர்கள் கிராமங்களில் குடவோலை வழக்கத்தில் இருந்ததாகக் கூறுகின்றது

உத்திரமேரூரில் முதல் பராந்தகன் சோழன் காலத்தில் வைகுந்தப் பெருமாள் கோவில் கல்வெட்டு கி பி 919/921 இல் வரையப் பெற்று உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்தில் கிராம நிர்வாகம் குடவோலை முறைப்படி நடைபெற்று வந்ததை உறுதி செய்கின்றது. ஆக குடவோலை முறை ராசராச சோழன் காலத்திற்கு முன்பே இருந்து வந்ததது தெளிவாக விளங்குகிறது.இம்முறை பிராமனர்கள் அதிகம் வசித்த, அவர்களுக்க்கு தானமாக வழங்கப்பட்ட அகரம், சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம் ஆகிய இடங்களில் கிராம சபை என்ற பெயரில் வழங்கப்பட்டது. வேளாண் மக்கள் வாழ்ந்து வந்த இடங்கள் ஊர் என்றும் அங்கு இருந்த சபைகள் ஊர் சபை என்றும் வழங்கப்பட்டது. மற்ற ஊர்களில் குடவோலை முறைவழக்கத்தில் இருந்தமைக்கு தக்க ஆதாரம் இல்லை.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு போட்டியிட விரும்புவோரின் பெயர்கள் ஓலைத்துண்டுகளில் எழுதப்பட்டு ஒரு குடத்தில் இடப்படும். பிறகு அவை நன்கு குலுக்கப்படும். பிறகு ஒரு சிறுவனை அழைத்து எத்தனை உறுப்பினர்கள் தேவையோ அத்தனை ஓலை நறுக்குகள் எடுக்கப்படும். அவற்றில் உள்ள பெயர்கள் உரக்கப்படிக்கப்பட்டு அவர்கள் சபையின் உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்படுவர். இதுவே குடவோலை முறையாகும்.

உத்திரமேரூர் கல்வெட்டில் குடவோலைமுறையில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகுதிகள் பற்றி தெளிவாக கூறப்பட்டிருக்கின்றன. அவற்றின் விவரம் வருமாறு:

1. 35 முதல் 70 அகவைக்குள் உள்ள ஆண் மக்கள்

2 குறைந்த அளவு கால்வேலி நிலம் இருக்க வேண்டும். குடியிருக்க சொந்த வீடு இருக்க வேண்டும். ஆனால் இதற்கும் விதி விலக்கு உண்டு வேதப் படிப்பில் சிறந்தவன், நான்கு படிகளில் ஒன்றையாவது நன்கு கற்று இருந்தால் அவனுக்கு அரைகால்வேலி நிலம் இருந்தால் போதும்.

3. ஒருவர் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து உறுப்பினராக இருந்தால் அவர் அந்த வட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட முடியாது. ஊர் சபையின் வேறு வட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

4. ஒழுக்கமற்றவராகவும் சரிவரக் கணக்கு காட்டாதவராகவும் இருந்தால் அவர் பெயர் குடவோலை முறையில் சேர்க்கப்படாது என்று உத்திரமேரூர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

மகளிருக்கு அதிகாரமளித்தல்

நல்லாட்சி வழங்குவதற்கு மட்டுமின்றி மகளிருக்கு அதிகாரமளிப்பதற்கும் உள்ளாட்சி முறை பேருதவி செய்து இருக்கிறது. உள்ளாட்சியை ஏற்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட 73வது மற்றும் 74வது அரசியல் சட்ட திருத்தங்களில் (பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர்ப்பாலிகா சட்டங்கள்) உள்ளாட்சி பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு அதாவது 33.3 விழுக்காடு மகளிருக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. பெண்கள் தவிர பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கும் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ற



வகையில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருக்கிறது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டு, இட ஒதுக்கீடும் வழங்கப்பட்டதன் விளைவாக ஒரு காலத்தில் அடுப்பூதும் இனமாக கருதப்பட்ட பெண்கள் இன்று அரசாட்சி செய்யும் இனமாக மாறியிருக்கின்றனர். இந்தியா முழுவதும் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர். நாடு முழுவதும் உள்ள 2 லட்சத்து 40 ஆயிரம் கிராம ஊராட்சிகள், 6000 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட மாவட்ட ஊராட்சிகளிலிருந்துதான் இவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 10 லட்சத்திற்கு மேற்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் பெண்கள் ஆவர். 1992ம் ஆண்டில் பஞ்சாயத்து ராஜ் சட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும் 1993ம் ஆண்டில்தான் இது சட்டமாக்கப்பட்டது. தொடக்கத்தில் சில மாநிலங்களில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் பின்னர் நாடு முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டது. தற்போது நாகலாந்து, மேகாலயா, மிசோராம் ஆகிய மூன்று வடகிழக்கு மாநிலங்கள், தில்லி யூனியன் பிரதேசம் தவிர நாடு முழுவதும் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டன. ஊராட்சி தலைவராகவோ அல்லது ஊராட்சி ஒன்றியக் குழு பெருந்தலைவராகவோ பெண் ஒருவர் தேர்வு செய்யப்பட்டால் அவருக்குப் பதில் அவரது கணவர் ஆட்சி செய்யும் நிலை காணப்பட்டது எனினும்காலப் போக்கில் தங்களது குடும்பத்தினரின் தலையீடுகளை முறியடித்து சொந்தமாகவே நிர்வாகம் செய்யத் தொடங்கிவிட்டனர். ஆனால் தலைவர்களாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளைவிட பெண்கள் தலைவர்களாக இருக்கும் உள்ளாட்சி அமைப்புகளில் வியக்கத்தகுந்த சாதனைகள் படைக்கப்பட்டு இருக்கின்றன. பெண்களின் நிர்வாகத்திறனை கண்டு வியந்த பல மாநிலங்கள் மகளிருக்கான இட ஒதுக்கீட்டை 33 சதவீதத்திலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தி இருக்கின்றன. ஆந்திரா, சதீஷ்கர், ஜார்க்கண்ட், கேரளா, மராட்டியம், ஒரிசா, ராஜஸ்தான், திரிபுரா, மத்திய பிரதேசம், பீகார், உத்தராகாண்ட், இமாச்சலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மகளிருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா முழுவதும் மகளிருக்கான இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்த முடிவு செய்த மத்திய அமைச்சரவை இதற்கான அரசியல் சட்ட திருத்த முன்வரைவுக்கு கடந்த 2009ம் ஆண்டு ஆகஸ்ட் 27ந்தேதியன்று ஒப்புதல் அளித்தது. அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இப்புதிய சட்டத் திருத்த முன் வரைவு தற்போது சட்டம் மற்றும் நீதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஆய்வில் உள்ளது. வெகுவிரைவில் இச்சட்டத் திருத்த முன்வரைவு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டால் அது மகளிருக்கு அதிகாரமளிக்கும் நடவடிக்கைகளில் புதிய மைல்கல்லாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளாட்சியும் நல்லாட்சியும்

ஒரு நாட்டில் நல்லாட்சி வழங்குவதற்கு தேவையான கருவிகளில் முதன்மையானது உள்ளாட்சி என்பதை எவராலும் மறுக்க முடியாது. ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அதன் திட்டமிடலில் மக்களும் பங்கேற்க வேண்டும் என்பது அடிப்படை தேவையாகும். அந்த வகையில் நாட்டின் திட்டமிடலில் மக்களை பங்கேற்கச் செய்வதற்கு உள்ளாட்சி அமைப்புகள் பாடுபடுகின்றன.

இந்தியாவின் ஏதோ ஒரு மூலையில் இருக்கும் கிராமத்திற்கு என்ன தேவை என்பதை மத்தியில் உள்ள ஆட்சியாளர்களால் உணர முடியாது - எனவே அவர்களால் அதற்கேற்ற வகையில் திட்டமிடவும் முடியாது. ஆனால் உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்தியிருப்பதன் மூலம் உள்ளூர் அளவிலான தேவைகளை உள்ளாட்சி அமைப்புகளே கண்டறிந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும். தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்றவை உள்ளூர் மக்களின் தேவைகளை உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நிறைவேற்றுவதற்கு வகை செய்பவை ஆகும். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகளும், பேரூராட்சிகளும் ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஓராண்டிற்கும் ஒரு குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதாவது தமிழகத்தில் சுமார் 12,500 கிராம ஊராட்சிகள்

இருப்பதாகக் கொண்டால் ஒவ்வொரு ஆண்டும் 2,500 கிராம ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 5 ஆண்டுகளின் முடிவில் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும். இந்த நிதியைக் கொண்டு அக் கிராமத்திற்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர முடியும் என்பதால் மக்களின் தேவைகள் எளிதாக நிறைவேறும்.

அதுமட்டுமின்றி கிராமப்புறங்களில் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது மூன்று முறை அதாவது ஜனவரி 26ம் தேதி இந்தியக் குடியரசு நாள், ஆகஸ்ட் 15 இந்திய சுதந்திர நாள், அக்டோபர் 2 மகாத்மாகாந்தி பிறந்த நாள் ஆகிய நாட்களில் கிராம சபைகள் கூட்டப்பட்டு அதில் உள்ளாட்சி அமைப்புகளில் வரவு செலவு கணக்குகள் தணிக்கைக்காக வைக்கப்படும். உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் செய்யப்பட்ட நலத்திட்டப்பணிகள் குறித்து அப்பகுதி மக்களுக்கு தெரியும் என்பதால், ஏதேனும் முறைகேடுகள் நடந்திருந்தால் பொதுமக்களே கண்டு பிடித்துவிடுவார்கள் இதற்கு பயந்து உள்ளாட்சி அமைப்புகளில் நிர்வாகிகளாக இருப்பவர்கள் முறைகேடுகளில் ஈடுபட தயங்குவார்கள். இது மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் ஊழல் ஒழிந்து நல்லாட்சி அமைய வழி வகை ஏற்படும்.

முழுமையான அதிகாரமளித்தல் தேவை

இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகள் நீண்ட காலமாக செயல்பட்டு வருகின்றன என்ற போதிலும் 1992ம் ஆண்டில் பஞ்சாயத்து ராஜ் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு முறைப்படி தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. இதனால் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மக்களின் தேவைகள் உள்ளூர் அளவிலேயே நிறைவேற்றப்படுகின்றன. எனினும் மின் விளக்குகளை அமைத்தல், சாலை வசதிகளை ஏற்படுத்துதல், குடிநீர் வசதிகள் செய்து தருதல் போன்ற அடிப்படை பணிகளைத்தான் உள்ளாட்சி அமைப்புகளால் செய்ய முடிகிறதே தவிர வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவது போன்ற திட்டங்களை உள்ளாட்சி அமைப்புகளால் செய்ய முடிவதில்லை.

பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி இந்திய அரசியல் சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள 29 வகையான பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் போதிலும், இவை போதுமானவையாக இல்லை. அதுமட்டுமின்றி, உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு கூட மத்திய, மாநில அரசுகளை நம்பியே இருக்க வேண்டியிருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகள் உள்ளூர் அரசாங்கங்களாக செயல்பட வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டம் கூறும் போதிலும், நடைமுறையில் இது சாத்தியமாகவில்லை. இந்தியா கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படியில் செயல்படும் நாடு என்பதால் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி மற்றும் பிற அதிகாரங்கள் சம்பந்தப்பட்ட மாநில சட்டப்பேரவைகளின் கைகளிலேயே உள்ளன. இதனால், உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மாநிலங்களுக்கு மாநிலம் மாறுபடுகிறது.

இந்த நிலை மாற்றப்பட்டால்தான் உள்ளாட்சி அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட முடியும். இதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். மாநில அரசுகளால் வசூலிக்கப்படும் வரிகளில் ஒருபகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால், மாநில அரசுகள் அந்த நிதியை தங்களது விருப்பம் போலத்தான் வழங்குகின்றன. இந்த நிலையை மாற்றி வரி வசூலில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வெண்டிய நிதி மாதாமாதம் வழங்கப்படும் வகையில் விதிமுறைகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகள் தொடர்பான அதிகாரங்கள் அனைத்தும் முழுமையாக உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கப்பட வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்காக மத்திய அரசு ஒதுக்கும் நிதி தற்போது மாநில அரசின் மூலமாகத் தான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருகிறது. இந்த நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதி பல்வேறு சிரமங்கள் உள்ளன. இந்த நிலையை மாற்றி மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு நேரடியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிடைக்க வகை செய்யப்பட வேண்டும். இந்த சீர்திருத்தங்களைச் செய்தால் உள்ளாட்சி அமைப்புகள் மட்டுமின்றி நல்லாட்சியும் செழித்து வளரும் என்பது உறுதி. ●